இராணிப்பேட்டை நகராட்சி, காரை அரசினர் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் ஆதி திராவிடர் நலத்துறை தாட்கோ நிதியில் ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள பள்ளி வகுப்பறைகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, நகரமன்றத் தலைவர் திருமதி.சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, தலைமையாசிரியர் கணபதி, பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் செழியன், நகராட்சி பொறியாளர் விநாயகம் (பொ), நகரமன்ற உறுப்பினர் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 27 ஆம் தேதி

பள்ளி - கல்லூரிகளுக்கு விடுமுறை!

மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

சிவகங்கை. அக்.21- சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

வருகிற 27. 10. 23. வெள்ளிக் கிழமை மாமன்னர் மருது பாண்டியர் 222வது குருபூஜை காளையார் கோவிலில்நடைபெற உள்ளது. மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினை பராமரிக்கும் வகையில் தேவகோட்டை, இளையான்குடி, திருப்பு வனம், மானாமதுரை, திருப்பத்தூர், சிவகங்கை ஆகிய தாலுகாக்கள் உள்ள பள்ளிகள் கல்லூரிகளுக்கு அன்றைய தினம் விடுமுறை அளிக்கப்படுகிறது. இத்தகவலை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் ஆகியோர் முன்னிலையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில், தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் நகர் மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம் உள்ளார்.

அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டையில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதை ஒப்பித்தல் போட்டி!

கே.கே.செல்லப்பாண்டியன் - கவிச்சுடர் கவிதைப் பித்தன் - டாக்டர் ரகு அண்ணாமலை - எழில்மாறன் - செல்வேந்திரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை அக். 21- புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க.கலை இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்தும் பள்ளி மாணவ மாணவியருக்கான கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி நாளை (22.10.2023 - ஞாயிறு) காலை 10.00 மணியளவில் அறந்தாங்கி கட்டுமாவடி சாலை நூற் மகால் (ஏ.சி.)ல் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சட்டம், நீதி மன்றங்கள். சிறைத்துறை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ஆர்.மேகநாதன் வரவேற்புரையாற்றுகிறார்.சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், கழக சொத்து பாதுகாப்பு குழு தலைவர் அறந்தாங்கி ராஜன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் ரகு அண்ணாமலை, கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர், திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர், பேச்சு போட்டி நடுவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஞான. இளங்கோவன், க.அடைக்கலம், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் ஜெ.அபுதாகீர், ஒன்றியச் செயலாளர்கள் அ. முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர். கணேசன், பொன்.ராமவிங்கம், வி.ஆர்.இளையராஜா, கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, பொன் கணேசன். எஸ்.குமார்(எ) துரைக் கண்ணு. உதயம் சண்முகம், வே.பொன்துரை, சக்தி இராமசாமி. எஸ்.எம்.முகமது அப்துல்லா. பேரூர் செயலாளர்கள் அ.அழகப்பன், செந்தில் குமார், பழனிகுமார், கே.சி. சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர், ஆர்,கே.கலைமணி, எஸ். ஜெயராமன், இரா. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் : சீனி.பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணியன் என்.வீரையா, ஆர்.வி.செல்வம், க.கலைவாணி சுப்பிரமணியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் த.மணிராஜன், டாக்டர் சுதர்சன். ராமலிங்கம், முத்து, கே.ஆர். இராமசாமி. மணிகண்டன், பொன். லோகநாதன். வளர்மதி, சிவ.பால. இளங்கோ, எம்.ஜி.ராமச்சந்திரன், நடசேன், எஸ். குமரேசன்,தி.கருணாகரன், ரம்யா பாலு. அப்துல் ஹமீது. இ.ஏ.பெரிய கருப்பன், எம்.சுந்தர பாண்டியன், சக்திவேல், ஹரி.விமலாதி. கலைச்செல்வன், மு.தேவி. பாத்திமா பீவி, கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் சுப,பழனிச்சாமி, ஆக்காட்டி ஆறுமுகம், நாகராஜன், சுப. சின்னையா, கி.அ.லோகநாதன், பிரகதம்பாள் ராஜேந்திரன், கே.என்.பி.டி.எஸ்.நாடி முத்து, ஆ. ஆறுமுகம், சோ. ராமச்சந்திரன், டி.ரமேஷ். செந்தில் வேலன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர் பாபு ஜான் நன்றி கூறுகிறார்.

திண்டுக்கல் வடக்கு ஒன்றியத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள

நியாய விலைக் கடை கட்டிடங்கள்!

இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திண்டுக்கல் அக். 21- திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி திண்டுக்கல் வடக்கு ஒன்றியத்தில் சீலப்பாடி ஊராட்சி உட்பட பல் வேறு கிராம பகுதிகளில் புதிதாக கட்டியுள்ள முழு நேர நியாய விலை கடையை கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ திறந்து வைத்தார். திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நியாய விலை கடைகளில் உள்ள பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

ஆரோக்கியசாமி நகரில் பகுதி நேர நியாய விலை கடை, எம் காப்பிலியபட்டியில் பகுதி நேர நியாய விலை கடை, வன்னியபாறைப்பட்டியில் பகுதி நேர நியாய விலை கடை, கோபகவுண்டன்பட்டியில் பகுதி நேர நியாய விலை கடை, பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட கோவிந்தராஜ் நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள முழு நேர நியாய விலை கடை, ஆகிய முழு நேரம் மற்றும் பகுதி நேர நியாய விலை கடைகள் திறக்கப்பட்டது. நிகழ்ச்சி யில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திண்டுக்கல் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் நெடுஞ்செழியன், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ராஜா,

மாவட்ட மாவட்டத் துணைச் செயலாளர் பிலால் உசேன், சீலப்பாடி ஊராட்சி மன்ற தலைவர் மீனாட்சி , அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட கவுன்சிலர் பரமேஸ்வரி, விவசாய அணி இல.கண்ணன், துணைப் பதிவாளர் பொது விநியோகத் திட்டம் அன்புக்கரசன், கூட்டுறவு சார் பதிவாளர் செல்வகுமார், மேற்கு வட்ட வழங்கல் அலுவலர் சுல்தான் சிக்கந்தர், திண்டுக்கல் மேற்கு தாசில்தார் செழியன், கூட்டுறவு சங்க செயலாளர் நாராயணசாமி, ஒன்றிய கவுன்சிலர் வெங்கடேசன், ஒன்றிய செயற்குழு உறுப்பினர் பொன் ராமன் உட்பட. ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூரில் இன்று துவக்க நிகழ்ச்சி!

‘நீட்’ தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரி கையெழுத்து இயக்கம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

திருச்செந்தூர், அக். 21- நீட் தேர்விலிருந்துதமிழ் நாட்டிற்குவிலக்குகோரி 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் இன்று (21.10.2023) திருச்செந்தூரில் துவக்க நிகழ்ச்சி நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மருத்துவக் கல்விபயில்வதற்கு நீட் தேர்வுஅவசியம் எனஒன்றிய அரசுநடைமுறைப்படுத்தி வருகிறது. கிராமப்புற மாணவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவ கல்விபயில்வதற்கான வாய்ப்பு நீட் தேர்வால் பெருமளவு பாதிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனசட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நீட்டிலிருந்துவிலக்குவேண்டுமென்றதமிழகமக்களின் உணர்வை நிறைவேற்றித்தர ஒன்றிய அரசைதொடர்ந்துவலியுறுத்திவருகிறோம்.

இக்கோரிக்கையைநிறைவேற்றிடஉரியநடவடிக்கை எடுக்கவேண்டுமாய் இந்திய ஜனாதிபதியிடம் ஒப்படைக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவரிடமும் 50 நாட்களில் 50 லட்சம் கையொப்பம் பெற வேண்டுமெனதமிழ்நாடுமுதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

சென்னைகலைவாணர் அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் கையெழுத்து இயக்கத்தை முதலமைச்சர் துவக்கி வைக்க உள்ளார்.

அதன் தொடர்ச்சியாக தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பாகநீட் விலக்கு கோரிகையொப்பம் பெறும் துவக்கநிகழ்ச்சி 21.10.2023 அன்றுகாலை 10 மணிக்கு திருச்செந்தூரில் உள்ள கே.டி.எம்.திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனது தலைமையிலும் கழக மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர்.செ.வெற்றிவேல், இளைஞர் அணி மாவட்டஅமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்டமாணவர் அணி அமைப்பாளர் சு.அருண்குமார், மருத்துவர் அணி மாவட்டத் தலைவர் ப.சிவகுமார் ஆகியோர் முன்னிலையிலும் கையெழுத்து துவக்க நிகழ்ச்சி நடை பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், இளைஞர்கள்,பெற்றோர்கள்,மருத்துவர்கள், பொதுமக்கள் மற்றும் தி.மு.க மாநில , மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி,பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர்,உறுப்பினர்கள், நகராட்சி மன்றதலைவர்கள் உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள், ஒன்றியபெருந்தலைவர்கள், ஊராட்சிஒன்றிய குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்றதலைவர்கள், நடைநடை உறுப்பினர்கள், ஊராட்சி மன்றதலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பொதுமக்கள் பெருந்திரளாகபங்கேற்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்!

நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய அரசிடம் வலியுறுத்திய

தமிழ்நாடு முதலமைச்சருக்கு மீனவரணி சார்பில் நன்றி!

மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 21- 14.10.2023 அன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 மீனவர்கள் மற்றும் அவர்களது ஐந்து மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர். கழகத்தலைவர், தளபதியார் அவர்களுக்கு கழக மீனவரணி சார்பில் நன்றி தெரிவித்து மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இருவேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்களது மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர். கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கடந்த 14.10.2023 அன்று INDTNMM237, INDTN10MM970, INDTN10MM56 மற்றும் INDTN10MM708 ஆகிய பதிவு எண்கள் கொண்ட 4 மீன்பிடிப் படகுகளில் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களும் மற்றொரு சம்பவத்தில் INDTN11MM725 பதிவுஎண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்துள்ளனர் அவர்களை விடுவிக்க இந்திய ஒன்றிய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது வேதனையளிக்கிறது. இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை இந்திய பிரதமர் அவர்கள் துவங்கி வைத்த நாளிலும் நாகை, கோடியக்கரை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் கொலைவெறி தாக்குதல் நடத்தியதோடு அவர்களின் தகவல் தொடர்பு சாதனங்கள், மீன்பிடிவலைகள், மீன்கள் என அத்தனை உடமைகளையும் கத்திமுனையில் பறித்து சென்றுள்ளது மிகுந்த கவலையளிக்கிறது.

கடந்த நான்கு மாதங்களாக இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டூழியம் மிக அதிகரித்துள்ளதை தடுத்து நிறுத்த வேண்டும் இந்திய மீனவர்களின் மீதான கொலைவெறி தாக்குதல்கள் தொடராத வண்ணம் இந்திய ஒன்றிய அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத்தலைவர் தளபதியார் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - சிவ.வீ.மெய்யநாதன் - சி.வெ.கணேசன் பங்கேற்பு!

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாபெரும் கையெழுத்து இயக்கம்!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், அக். 21- இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்து ராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின்படி, பாசிச பா.ஜ.க. நீட் தேர்வை ரத்து செய்யவேண்டும்’ என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், மாபெரும் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்க உள்ளோம். இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில், இன்று (21.10.2023 - சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் இராமநாதபுரம் பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட உள்ளது.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் , மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அதுசமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள். ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள். சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், பாக முகவர்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மக்கள் போராட்டமாக மாற்றும் பெரும் பொறுப்பு நம்மிடம் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வடமதுரை ஒன்றியம் வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வடமதுரை, அக்.21- வடமதுரை ஒன்றிய கழகத்தின் சார்பில் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதிக்கான வாக்குச் சாவடி முகவர்களுக்கான பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. இதில் பாடியூர், கொசவபட்டி தென்னம்பட்டி, மோர்பட்டி, புத்தூர் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண் டனர். ஒன்றிய செயலாளர் ளர் சுப்பையன் தலைமை வகித்தார். சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் நாச்சிமுத்து கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப் பட்டது.

அய்யலூர் பேரூர் கழகச் செயலாளர் பேரூராட்சி தலைவர் கருப்பன், அய்யலூர் வடமதுரை ஒன்றிய துணைத் தலைவர் ஆனந்தி அறிவுகண்ணன், வடமதுரை ஒன்றிய அவை தலைவர் முனியப்பன், திண்டுக்கல் மாவட்ட மாணவரணி செயலாளர் தினேஷ் முத்துகிருஷ்ணன் வடமதுரை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அன்பழகன் மோர்பட்டி ஒன்றிய கவுன்சிலர் ஈஸ்வரி பாரதிதாசன் ஒன்றிய பொருளாளர் செந்தில்முருகன்மாவட்ட. ஒன்றிய.

பேரூர். நகர. கிளைச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் சீலப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட சீலப்பாடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள முழுநேர நியாய விலைக் கடையை கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஆகியோர் திறந்து வைத்தனர்.

கலைஞர் நூற்றாடு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு கலைப் பண்பாட்டு துறை நுண்கலைப் பணி திட்டங்களின் கீழ் மாநில அளவிலான ஓவியம் மற்றும் சிற்பக் கலைக் காட்சி தொடக்க விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சென்னை – கூளைமேடு ஸ்ரீ தர்சினி கலைக் கூடத்தின் தாளாளர் மற்றும் இயக்குநர் தா.தர்மலிங்கம், ஓவியத் துறையில் சிறப்பான வகையில் பயிற்சி அளிப்பதை பாராட்டி கலைப் பண்பாட்டு துறையின் சார்பில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த கலை ஆசிரியருக்கான நல்லாசிரியர் விருதையும் ரூபாய் 10,000க்கான பொற்கிழியையும் வழங்கினர். அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் தா.மணிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.